தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

## பல்கலைக்கான விண்ணப்பங்கள் இன்றுடன் நிறைவு





2022/23ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது இன்றுடன் (05) முடிவடைவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு ஒன்லைன் முறை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதன்படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இன்றைய தினத்தின் பின்னர் நீடிக்கப்படாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் கடந்த செப்டம்பர் மாதம் 4ஆம் திகதி வெளியிடப்பட்டன. 263,933 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர், அவர்களில் 166,938 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு




2023ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு குவாண்டம் புள்ளிகளை கண்டுபிடித்து தொகுத்ததற்காக 3 விஞ்ஞானிகளுக்கு கூட்டாக வழங்கப்படுகிறது.

மவுங்கி ஜி.பவேண்டி (Moungi G.Bawendi), லூயிஸ் ஈ.ப்ரூஸ் (Louis E.Brus) மற்றும் அலெக்ஸி ஐ.எகிமோவ் (Alexei I.Ekimov) ஆகிய மூவரும் 2023ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்குத் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

வேதியியலில் நோபல் பரிசு பெற்றவர்கள் மூவரும் நெனோ உலகத்தை ஆராய்வதில் முன்னோடிகளாக இருந்துள்ளனர் என்றும் ரோயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆஃப் சயின்ஸின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## முச்சக்கரவண்டி சாரதிகள் போராட்டம் கைவிடப்பட்டது

மட்டக்களப்பு - மண்முனை, தென் எருவில் பற்று பிரதேசசபைக்கு முன்பாக நேற்று (04) முச்சக்கரவண்டி சாரதிகள் நடாத்திய போராட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸாரின் உறுதிமொழியையடுத்து கைவிடப்பட்டது. களுவாஞ்சிகுடி நகர்ப்பகுதியில் முச்சக்கர வண்டிசேவையில் ஈடுபடுவோர் வெளியிடங்களிலிருந்துவரும் முச்சக்கர வண்டி சாரதிகளினால் பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அதனை தடுக்குமாறு கோரி பிரதேசசபைக்கு முன்பாக நூற்றுக்கணக்கான முச்சக்கர வண்டிகளை நிறுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் குறித்த முச்சக்கர வண்டி சாரதிகளின் பிரச்சினை தொடர்பில் பிரதேசசபையின் செயலாளர் சா.அறிவழகன் கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிகுடி பிரதேசத்திற்கு வெளியிலிருந்துவரும் முச்சக்கர வண்டிகள் தங்களை தொழில் செய்யவிடால் அவர்கள் சேவையில் ஈடுபடுவதன் காரணமாக களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் தொழில்செய்யும் முச்சக்கர வண்டி சாரதிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது. பிரதேசசபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கள் சேவையில் ஈடுபடும் நிலையில் வேறு இடங்களிலிருந்து வருபவர்கள் அந்த ஒழுங்கு நடைமுறையினை மீறிய வகையில் செயற்படுவதாகவும் இங்கு சுட்டிக் காட்டினார்கள்.

இதன்போது பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி சாரதிகளை பொலிஸாரின் ஒப்புதலுடன் காட்சிப்படுத்தவும் சில போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றவும் தீர்மானிக்கப்பட்டதுடன் ஒரு வாரத்திற்குள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் உறுதிமொழியளிக்கப்பட்ட நிலையில் ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றது.

## A/L பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு



க.பொ.த உயர்தர பரீட்சைக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 04.01.2024 தொடக்கம் 31.01.2024 வரை உயர்தர பரீட்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பணிப்புறக்கணிப்பு தொடர்கிறது – அலுவலக ரயில் சேவையில் தாமதம்



ரயில்வே உப கட்டுப்பாட்டாளர்கள் குழுவால் தொடங்கப்பட்ட பணி புறக்கணிப்பு நடவடிக்கை தொடர்கிறது. மாளிகாவத்தை புகையிரத வீதியின் நுழைவாயிலில் வைத்து புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர் உப கட்டுப்பாட்டாளர் ஒருவரை தாக்கியதை அடுத்து, ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் நேற்று (04) முதல் பணி புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி நேற்று சுமார் 78 ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், பல ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன. எவ்வாறாயினும், நேற்று தாக்குதல் நடத்திய பாதுகாப்பு அதிகாரியை பணி இடைநிறுத்தம் செய்வதற்கு ரயில்வே திணைக்களம் முடிவு செய்திருந்தது.

ஆனால் தாக்குதலில் ஈடுபட்ட ஏனைய நபர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ரயில்வே பிரதி கட்டுப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் காரணமாக உப கட்டுப்பாட்டாளர்களால் விடுமுறையை அறிவித்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.டி.டி.பிரசாத் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையினால் நேற்றைய தினம் ரயிலில் பயணிக்க வந்த பெருந்தொகையான பயணிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். சில ரயில் நிலையங்களில் பயணிகள் தீவிரநிலையில் ஈடுபட்ட சம்பவங்களும் நடந்தனர்.

இதேவேளை, உப கட்டுப்பாட்டாளர்களின் சுகயீன விடுமுறை அறிக்கை காரணமாக இன்று (05) ரயில் சேவைகள் ரத்து மற்றும் தாமதங்கள் ஏற்படக்கூடும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி இன்று காலை பல அலுவலக ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. எனினும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ரயில்களை இயக்க முயற்சித்து வருவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக்கோரும் பரிந்துரைப்பு மனு ஐ.நா அலுவலகத்தில் கையளிப்பு



இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிருவாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட கௌரவநீதிவான் T.சரவணராஜா அவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் பங்கேற்போடு 2023.10.02 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மாண்புமிகு அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து, நேற்றையதினம் (04) நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கையளிக்கப்பட்டது.

## இன்றும் மழை பெய்யும்



மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30–40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50–55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

## ஆசிய விளையாட்டு போட்டிகளில் இலங்கைக்கு தங்கம்




ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கம் வென்றார்.

இவர் குறித்த தூரத்தை ஓடி முடிக்க 2.03.20 நிமிடங்களை எடுத்துக்கொண்டார். 19 ஆவது ஆசிய விளையாட்டு போட்டிகள் சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெறுகின்றது.

## தரம் உயர்த்தப்பட்ட செந்நெல் கிராம வைத்தியசாலை கோலாகலமாக திறந்து வைப்பு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சம்மாந்துறை செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு பிரதேச வைத்தியசாலையாக சுகாதார அமைச்சினால் தரம் உயர்த்தப்பட்டமைக்கமைவாக இவ்வைத்தியசாலையினை உத்தியோகபூர்வவமாக திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (4) இடம்பெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் சரசி பிரார்த்தனா விஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் கௌரவ அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் வை.பீ.ஏ.அஸீஸ் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போதுவைத்தியசாலைக்குத்தேவையான அம்பியூலன்ஸ் வண்டி மற்றும் தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (நூருல் ஹூதா உமர்)



## இம்ரான் கான் சிறையில் விஷம் வைத்து கொல்லப்படலாம் - வழக்கறிஞர் அச்சம்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், "தோஷ கானா" ஊழல் வழக்கில் கடந்த ஆகஸ்ட் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

தற்போது 70 வயதாகும் இம்ரான் கான், ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் இம்ரான் கானின் வழக்கறிஞர் நயீம் பஞ்சுதா, அவரை சிறையில் சென்று சந்தித்தார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வழக்கறிஞர் நயீம் பஞ்சுதா, இம்ரான் கானின் உயிருக்கு சிறையில் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்தார்.

இம்ரான் கானின் உணவில் விஷம் கலந்து கொடுக்கப்படலாம் என அச்சம் தெரிவித்த அவர், சிறையில் இம்ரான் கான் மனரீதியாக தொல்லைக்கு உள்ளாக்கப்படுவதாக குற்றம் சாட்டினார். இம்ரான் கானின் நடமாட்டத்தை சிறை அதிகாரிகள் தடுப்பதாகவும், சிறிய அறைக்கு அவரை மாற்றி உள்ளதாகவும் கூறிய நயீம், சிறையிலேயே இம்ரான் கானை கொல்ல சதி நடப்பதாக அவரது மனைவி புஸ்ரா பீவி கவலை தெரிவித்ததாக கூறினார்.

மேலும் இம்ரான் கானின் நிலை குறித்து இஸ்லாமாபாத் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனு நாளை (06) விசாரணைக்கு வர உள்ளதாக நயீம் பஞ்சுதா தெரிவித்தார்.

## டிக்கெட் கேட்டவர்களுக்கு கோலி கொடுத்த பதிலடி



10 அணிகள் பங்கேற்கும் ஒருநாள் உலகக் கிண்ண தொடர் அகமதாபாத்தில் இன்று (05) தொடங்குகிறது. இந்த தொடரின் முதல் போட்டியாக நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் மோதுகிறது.

இதனை தொடர்ந்து வரும் 8 ஆம் திகதி இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் சென்னையில் பலப்பரீட்சை நடத்துகிறது. இதற்காக இரு அணி வீரர்களும் நேற்று (04) சென்னை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில் விராட் கோலி தனது இன்ஸ்டா பக்கத்தில் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார். அதில் ஒருநாள் உலகக் கிண்ண தொடர் இன்று (05) தொடங்குகிறது. தன்மையுடன் ஒன்று கூறுகிறேன். டிக்கெட் கேட்டு யாரும் என்னை தொந்தரவு செய்யாதீர்கள். வீட்டில் இருந்தே கிரிக்கெட்டை பாருங்கள் என தெரிவித்துள்ளார்.